சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 24.09.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 6/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-11 |
| சாட்சியின் பெயர் | : | சிவராமன் |
| தந்தை பெயர் | : | கலியபெருமாள் |
| கிராமம் | : | திருவாரூர் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | அரசு மருத்துவர், திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை |
| வயது | : | 43 |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

இரண்டு எதிரிகளும் ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளார்.

முதல் விசாரணை

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 29.09.2022 ஆம் தேதி இரவு 8.52 மணியளவில் நான் திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியிலிருந்தபோது புதுக்குடி முருகானந்தம் என்பவருடைய மகன் அ.சா-1 ஆனந்த் வயது (26) உள்ள நபரை சிகிச்சைக்காக அவரது சகோதரர் முகேஷ் என்பவர் அழைத்து வந்திருந்தார். அவரை நான் பார்வையிட்டபோது அவர் என்னிடம் கடந்த 29.09.2022 ஆம் தேதி இரவு 7.00 மணியளவில் புதுக்குடி மெயின் ரோட்டில் ஆட்டோ ஸ்டான் அருகில் தெரிந்த ஒரு நபர் இரும்பினால் ஆன ஸ்பேனர் மூலம் தனது தலையில் தாக்கினார் என கூறினார். அவரை பரிசோதித்தபோது தலையில் 3x2x1 செ.மீ அளவிலான கிழிந்த காயம் ஒன்று தலையின் இடது பகுதியில் இருந்தது. அவர் நல்ல சுயநினைவுடன் இருந்தார் அவருக்கு முதல் உதவி சிகிச்சை அளித்து உள்நோயாளியாக அனுமதித்து அது தொடர்பாக நான் பதிவு செய்த **விபத்து பதிவேடு அ.சா.ஆ-4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. மேற்படி தேதியில் மேற்படி நேரத்தில் அ.சா-1 னுடன் குடவாசல் சமத்துவபுரத்தை சேர்ந்த ஜெயபாலு மகன் அ.சா-2 தங்கமணி வயது (23) உள்ள நபரை அவரது சகோதரர் சுகுமார் என்பவர் அழைத்து வந்தார். அவரை தெரிந்த ஒரு நபர் 29.09.2022 ஆம் தேதி இரவு 7.00 மணிக்கு புதுக்குடி மெயின் ரோட்டில் ஆட்டோ ஸ்டான் அருகில் தெரிந்த ஒரு நபர் இரும்பினால் ஆன ஸ்பேனரை கொண்டு தாக்கியதாக கூறினார். அவரை நான் பரிசோதித்து உள்நோயாளியாக அனுமதித்தேன். அது தொடர்பாக நான் பதிவு செய்த **விபத்து பதிவேடு அ.சா.ஆ-5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

அ.சா-2 தங்கமணி என்பவர் என்னிடம் சிகிச்சைக்கு வந்தபோது அவரை தெரிந்த நபர் தாக்கியதாக நான் தற்போது முதல் விசாரணையில் கூறியுள்ளேன். ஆனால் அ.சா.ஆ-5 ஆன விபத்து பதிவேட்டில் தெரியாத ஒரு நபர் தன்னை தாக்கினார் என்று என்னிடம் கூறியதாக பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் ஆமாம்.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.09.24 16:21:32 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.